# சாதாரணக் கூட்டம்

அன்புடையீர்

வணக்கம். பல்லடம் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் வருகிற **30.05.2023** செவ்வாய்கிழமை அன்று மாலை **03.00** மணியளவில் நகர்மன்றத்தலைவர் திருமதி.கவிதாமணி ராஜேந்திரகுமார்,B.B.M., அவர்களின் தலைமையில் நகர்மன்றக்கூட்ட அரங்கத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## பொருள் : 01

பல்லடம் நகராட்சியானது திருப்பூர் மாவட்டத்தில் உள்ள முதல் நிலை நகராட்சி ஆகும். பல்லடம் நகராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மொத்த மக்கள் தொகை 42,225 ஆகும். மேலும் தற்சமயம் நகரின் மொத்த மக்கள் தொகை 55,171 ஆகும். பல்லடம் நகராட்சிக்கு தற்சமயம் பில்லூர் அத்திக்கடவு கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தினசரி 4.60 MLD அளவுடைய குடிநீர் வழங்கப்பட வேண்டும். ஆனால் மேற்கண்ட திட்டத்தில் பல்லடம் நகராட்சிக்கு 4.00 MLD அளவுடைய குடிநீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 6 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், பல்லடம் நகராட்சியானது திருப்பூர் மாநகரத்திற்கு மிகவும் அருகில் அமைந்துள்ளதால் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருகி வருகிறது. பெருகி வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு, பல்லடம் நகராட்சிக்கு என தனியாக ஒரு குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுத்தினால் மட்டுமே சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள இயலும். எனவே, உடுமலைப்பேட்டையில் உள்ள திருமூர்த்திமலை அணையிலிருந்து சுமார் 68 கி.மீ நீளத்திற்கு குடிநீர் குழாய் பதித்து பல்லடம் நகராட்சிக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை நடைமுறைப்படுத்த நகர்மன்றத்தலைவர் அவர்களால் இத்தீர்மானம் முன்மொழியப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 02

பல்லடம் நகராட்சியானது திருப்பூர் மாவட்டத்தில் உள்ள முதல் நிலை நகராட்சி ஆகும். பல்லடம் நகராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி மொத்த மக்கள் தொகை 42,225 ஆகும். மேலும் தற்சமயம் நகரின் மொத்த மக்கள் தொகை 55,171 ஆகும். மேலும் நகரிலுள்ள மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 15,214 ஆகும். பல்லடம் நகராட்சிக்கு பில்லூர் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் நாள்தோறும் சுமார் 4.00 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதில் சுமார் 3.20 MLD (80%) நீர் கழிவுநீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. பல்லடம் நகராட்சியானது திருப்பூர் மாநகரத்திற்கு மிகவும் அருகில் அமைந்துள்ளதால் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருக்கம் ஏற்பட்டு அதிகளவு கழிவுநீர் வெளியேற்றுப்படும் சூழல் உள்ளது.

எனவே, வெளியேற்றப்படும் கழிவுநீரை கையாள பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையம் முல்லை நகர், பச்சாபாளையம் மற்றும் மங்கலம் சாலை மார்க்கெட்டிங் சொசைட்டி

ஆகிய மூன்று இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க நகர்மன்றத்தலைவர் அவர்களால் இத்தீர்மானம் முன்மொழியப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 03

பல்லடம் நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு பொது நிதி 2023–2024ன் கீழ் மேற்கொள்ள கீழ்க்காணும் பணிக்கு 10.04.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:02 சேடபாளையத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியில் சமையற்கூடம் கட்டுதல் | 28.00 | திரு.வி.கருப்பசாமி, ஒப்பந்ததாரர், பல்லடம். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.08% குறைவு |
| | | | M/s.உமையாள் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர். | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.03% குறைவு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள திரு.வி.கருப்பசாமி (மதிப்பீட்டினை விட 0.08% குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கும், மேலும் மேற்கண்ட பணியானது அரசின் திட்டப் பணியாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 04

பல்லடம் நகராட்சி ஈப்பு வாகனம் TN 42 F 5736 வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், டயர்களை புதியதாக மாற்றவும், சிறு பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.52,113/– ஆகும். மேலும், மேற்கண்ட பணியை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் M/s.சி.ஏ.ஐ. இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், கோவை அவர்களிடம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்: 1436/2016/இ1)

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 05

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 03 நாரணாபுரம் ஓடை அருகில் உள்ள நகராட்சி பொது கிணற்றில் உள்ள மின் மோட்டார் பழுதடைந்து பொது மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட மின் மோட்டார் அடிக்கடி பழுது ஏற்படுவதால் சீரான

முறையில் தண்ணீர் வழங்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பொது கிணற்றில் இருந்து 10 HP மின் மோட்டாரை மாற்றி விட்டு புதிதாக 10 HP மின் மோட்டார் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணி பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டியுள்ளதாலும், பொது கழிப்பிடத்திற்கும் தினசரி தண்ணீர் வழங்க வேண்டியுள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 06</u>

பல்லடம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-2022ன் கீழ் வடுகபாளையம் குட்டை நீர் நிலை மேம்பாடு செய்தல் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 15.04.2023 அன்று ஆய்வு மேற்கொண்டதில் குட்டை பகுதியினை சுற்றிலும் செட்டுநீர் பாசன வசதியுடன் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்குமாறு தெரிவித்தார்கள். எனவே, மேற்கண்ட பகுதியில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க தண்ணீர் வசதி இல்லாத நிலையில் உள்ளதால் வடுகபாளையம் குட்டை பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துவதற்கும், மரக்கன்றுகளுக்கு சொட்டு நீர் பாசனம் முறையில் குழாய்களை அமைக்கவும் வேண்டியுள்ளது.

மேற்காணும் வடுகபாளையம் குட்டை பகுதியில் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்துள்ள படி புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் குட்டையினை சுற்றிலும் பகிர்மான குழாய்கள் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 07</u>

தமிழ்நாடு அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டு வரப்பெற்றுள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் - 2023 (The Tamilnadu Urban Local Bodies Rules - 2023) மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.205/2023/சி1)

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

## பொருள் : 08

பல்லடம் நகராட்சியின் 2022 – 2023 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1002 /2023/சி1)

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

## பொருள் : 09

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளுக்கும் நகராட்சி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நகராட்சி வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள பகுதிகளுக்கு நகராட்சிக்கு சொந்தமான 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 3 தரைமட்டத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகமும் மற்றும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு ஆழ்துளை கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வார்டு எண்:01 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் பகிர்மான குழாய்கள், பிரதான குழாய்கள் மற்றும் கேட்வால்வு மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும் போது, குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரிசெய்யவும், குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே நகர்ப்பகுதிகளில் ஏற்படும் குழாய் உடைப்புகளை சரிசெய்ய மூலப்பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 10

பல்லடம் நகராட்சி பகுதிகளில் பில்லூர் அத்திக்கடவு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சுமார் 3.90 எம்.எல்.டி குடிநீர் பெறப்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலைத் தொட்டிகளான அண்ணாநகர், சி.டி.சி காலனி, மேற்கு பல்லடம், வடுகபாளையம், பனப்பாளையம், இராயர்பாளையம், கல்லம்பாளையம், சேடபாளையம், N.S.P. நகர், நாரணாபுரம், S.A.P. நகர் மற்றும் B.D.O. காலனி ஆகிய 12 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு, குடிநீருடன் தேவையான அளவு திரவ குளோரின் (Hypo chloride) கலந்து தினந்தோறும் விநியோகம் செய்வதற்கு ரூ.4.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 11</u>

பல்லடம் நகராட்சி பகுதிகளில் தமிழக அரசின் இரண்டு ஆண்டு கால வளர்ச்சிப் பணிகள் அடங்கிய பதாகைகள் (Banner) அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்க கீழ்க்கண்டவாறு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

1. M/s. ஸ்ரீ ஜெயம் டிஜிட்டல் பிளக்ஸ் பிரிண்டிங்,பல்லடம். – ரூ.10,500 /–

2. M/s. சன் பிளக்ஸ் பிரிண்டிங்,பல்லடம். – ரூ.10,200/–

3. M/s. ஸ்ரீ கருடா பிளக்ஸ் பிரிண்ட்,பல்லடம். – ரூ.9,600/–

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் குறைவாக (ரூ.9,600/–) விலைப்புள்ளி அளித்துள்ள M/s.கருடா பிளக்ஸ் பிரிண்ட், பல்லடம் அவர்களது விலைப்புள்ளியை ஏற்கலாம்.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று, பணியை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 12</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான திருச்சி – கோவை சாலையில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலம் விரிவாக்கப் பணி நடைபெற்று வருவதால், திருப்பூர் சாலை சந்திப்பிலுள்ள உயர்மின் கோபுர மின்விளக்கை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. திருப்பூர் சாலையின் மையத்தில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் I-Land நடுவே கான்கிரீட் பில்லர் அமைத்து புதியதாக கேபிள் பதித்து மேற்கண்ட உயர்மின் கோபுர விளக்கை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை M/s.மார்டன் டெக்னாலஜி, கோவை அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :13</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான திருச்சி – கோவை சாலையில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலம் விரிவாக்கப் பணி நடைபெற்று வருவதால், பொள்ளாச்சி பைபாஸ் சாலை சந்திப்பில் திருச்சி சாலையில் உள்ள மையதடுப்பு விளக்கை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. பொள்ளாச்சி பைபாஸ் சாலையின் மையத்தில் புதியதாக அமைக்கப்பட்டு வரும் I-Land நடுவே கான்கிரீட் பில்லர் அமைத்து புதியதாக கேபிள் பதித்து மேற்கண்ட விளக்கை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை M/s.மார்டன் டெக்னாலஜி, கோவை அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் :14</u>

பல்லடம் நகராட்சிப் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள், தினசரி மார்க்கெட் கடைகள், வாரச்சந்தை கடைகள், என்.ஜி.ஆர். ரோடு அண்ணா வணிக வளாக கடைகள், மங்கலம் ரோடு கடைகள் மற்றும் மாணிக்காபுரம் ரோடு கடைகள் என நகராட்சிக்கு 230 கடைகள் உள்ளன. மேலும், ஆண்டு குத்தகை இனங்களாக ஆட்டிறைச்சி கடை 9 , மாட்டிறைச்சி கடைகள் 4, பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல், பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம், வாரச்சந்தை சுங்க வசூல், வாரச்சந்தை கட்டண கழிப்பிடம் என 18 இனங்கள் உள்ளன.

01.04.2023 ன் நிலவரப்படி 230 கடைகளில் 71 கடைகள் ஏல நடவடிக்கையில் உள்ளது. மேலும், ஆண்டு குத்தகை இனங்களில் பேருந்து நிலைய நுழைவு கட்டண வசூல், பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம், பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், ஆட்டிறைச்சி கடை 1 மற்றும் மாட்டிறைச்சி கடைகள் 2 என 6 இனங்கள் ஏல நடவடிக்கையில் உள்ளது.

நகராட்சிக்கு சொந்தமான ஏல நடவடிக்கையில் உள்ள 71 கடைகளில் பேருந்து நிலைய 32 கடைகளில் 24 கடைகள் காலியாக உள்ளது. தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளில் 84 கடைகளில் 31 கடைகள் காலியாக உள்ளது. வாரச்சந்தை கடைகளில் 52 கடைகளில் 10 கடைகள் காலியாக உள்ளது. என்.ஜி.ஆர். ரோடு வணிக வளாக முதல் தள கடைகளில் 11 கடைகளில் 4 கடைகள் கட்டப்பட்ட 2015ம் ஆண்டிலிருந்து ஏலம் போகாமல் காலியாக உள்ளது. மாணிக்காபுரம் ரோடு கடைகளில் 4 கடைகளில் 2 கடைகள் காலியாக உள்ளது. ஆண்டு குத்தகை இனங்கள் 01.04.2021 முதல் துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. அவ்வினங்களுக்கு தொடர் நடவடிக்கையாக ஏலம் விடப்பட்டு வருகிறது.

ஏல நடவடிக்கையில் உள்ள 71 கடைகளில் 14 கடைகள் மட்டும் 2018 முதல் காலியாக உள்ளது. மீதமுள்ள 57 கடைகள் கொரோனா காலகட்டத்திற்கு பிறகு கடைகள் ஒப்படைக்கப்பட்டும், வாடகை செலுத்தாமல் நகராட்சியால் கடைகள் பூட்டப்பட்டும் ஏல நடவடிக்கைகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. காலியாக உள்ள கடைகள் அனைத்திற்கும் அரசு மதிப்பு அதிகமாக உள்ளதால் பொதுமக்கள் எவரும் ஏலம் கோர முன்வருவதில்லை. மேலும், மார்ச் - 2020 ம் ஆண்டு கொரோனா காலத்திற்கு பிறகு 48 கடைகள் ஏல நடவடிக்கையில் இருந்தது. அக்கடைகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி, 48 கடைகளுக்கு மட்டும் வாடகை மறுநிர்ணயம் செய்து ஏலநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்ட 48 கடைகளில் மார்ச் - 2023 வரை 32 கடைகள் ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 16 கடைகள் ஏலநடவடிக்கையில் தொடரப்பட்டு வருகிறது. தற்போது உள்ள ஏலம் போகாத 71 கடைகள் குறைந்தபட்சம் 24 முறை ஏலம் விடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஏலத்தில் பொதுமக்கள் ஏலம் கோர முன்வரவில்லை.

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடைகள், தினசரி மற்றும் வாரச்சந்தை கடைகளுக்கான அடிப்படை ஏலத் தொகையை அருகாமையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான அடிப்படை ஏலத் தொகை, பொதுப்பணித்துறை அடிப்படை வாடகை தொகை மற்றும் உள்ளூர் சந்தை வாடகை மதிப்பு ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டு தற்போதைய அடிப்படை ஏல வாடகை தொகையை மறு நிர்ணயம் செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் கடைகள் ஏலம் போக அதிக வாய்ப்புள்ளது. இது குறித்து தொடர்ந்து வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. இப்பொருள் குறித்து தணிக்கை தடைகளும் எழுப்பப்பட்டு வருகிறது. எனவே, ஏல அடிப்படை தொகையை மறுநிர்ணயம் செய்து ஏல நடவடிக்கைகளை தொடர வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மேற்காணும் கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு தொடர் ஏலம் விடப்பட்டும், கடைகள் எடுக்க யாரும் முன்வராத காரணத்தினால், ஏலம் போகாத கடைகள் மற்றும் குத்தகை இனங்களால் தொடர் வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. எனவே, வருவாய் இழப்பை தவிர்க்க வாடகைத்தொகையை மறுநிர்ணயம் செய்ய அவசியமாகிறது. ஆதலால், வாடகையை மறுநிர்ணயம் செய்ய நகராட்சிப்பொறியாளர், மேலாளர், நகரமைப்பு அலுவலர், துப்புரவு அலுவலர், பணி மேற்பார்வையாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்கள் உள்ளடக்கிய குழு அமைத்து, பொது ஏல நடவடிக்கைக்கு மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண். 1422/2022/அ2)

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

## பொருள் :15

பல்லடம் நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தினசரி மார்க்கெட் கடைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதை இடித்துவிட்டு புதியதாக 48 கடைகள் அமைப்பதற்கும், இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் புதியதாக இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறையில் ந.க.எண்.29404/2022/SS2, நாள்.20.03.2023 மூலதன மானிய நிதியில் (CGF) ஒதுக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் இனங்களை பொது ஏல நடவடிக்கைகளில் இருந்து தவிர்க்கவும், மேற்கண்ட கடைகளில் உள்ள பகுதி கடை ஏலதாரர்களுக்கு தினசரி மார்க்கெட் கடைகளில் உள்ள ஏலம் போகாத காலியாக உள்ள கடைகளில் தற்காலிகமாக கடைகள் அமைத்துக்கொள்ளவும், மீதமுள்ள கடை ஏலதாரர்களை வாரச்சந்தை வணிக வளாகத்தில் தற்காலிகமாக கடைகள் அமைத்துக்கொள்ளவும், வாரச்சந்தை நாட்களில் வியாபாரத்திற்கு குந்தகம் விளைவிக்காமல் கடைகள் அமைக்கவும், அதற்கான தற்காலிக வாடகைத் தொகையினை கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1422/2014/அ2)

1. கடை ஏலதாரர்களுக்கு தற்காலிகமாக தினசரி மார்க்கெட்டில் உள்ள ஏலம் போகாத காலியாக உள்ள கடைகளையும், மீதமுள்ள ஏலதாரர்களுக்கு வாரச்சந்தையில் தற்காலிக கடைகள் அமைத்துக்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
2. வாரச்சந்தையில் தற்காலிகமாக அமைக்கும் கடைகளுக்கு வாரச்சந்தை நாட்களில் குத்தகை உரிமதாரருக்கு வாடகைத்தொகையை செலுத்த அனுமதிக்கலாம்.
3. தற்காலிகமாக அமைக்கும் கடைகளுக்கு வாடகைத்தொகையாக 6 “ x 8 “ அளவில் உள்ள கடைகளுக்கு நாளொன்றுக்கு ரூ.150/- வீதம் மாத வாடகையாக ரூ.4500/- ம், 10 “ x 16 “ அளவில் உள்ள கடைகளுக்கு நாளொன்றுக்கு ரூ.300/- வீதம் மாத வாடகையாக ரூ.9000/- ம், வாரச்சந்தையில் அமையவுள்ள தற்காலிக கடைகளுக்கு நாளொன்றுக்கு ரூ.150/- வீதம் மாத வாடகையாக ரூ.4500/- ம், தற்காலிக வாடகையாக நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம் அல்லது காலியாக உள்ள கடைகளின் கடைசியாக விடப்பட்ட ஏலக்கேட்பு தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்வு செய்து அதனை தற்காலிக வாடகையாக நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் முடிவு செய்யலாம்.

## பொருள் :16

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்தல், கொரோனா நோய் தடுப்பு பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.28639/2018/ஜே3, நாள்.04.12.2018 ன் படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டு இந்நகராட்சியில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் 181 தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு அடிப்படையில் ஆண்டு முழுவதும் அமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர்

வடிகால்கள் சுத்தம் செய்தல், கொரோன நோய் தடுப்பு பணி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவ்வகையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கடந்த **01.01.2019** முதல் **31.12.2021** வரை திருவாளர். துரை அன் கோ, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் இப்பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கொரோனா பெருந்தொற்று காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத நிலையிலும் **14.09.2021** அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வெவ்வேறு நகராட்சிகளில் வெவ்வேறு விதமான விலைப்புள்ளி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாநிலம் முழுவதும் அனைத்து நகராட்சிகளிலும் ஒரே மாதிரியான விலைப்புள்ளி மற்றும் அந்தந்த நகராட்சியின் மக்கள் தொகை / குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் ஆளிநர்களின் எண்ணிக்கையையும் நிர்ணயம் செய்ய உள்ளதாகவும், அதுவரை வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் கோருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் ஒருங்கிணைந்த விலை விகிதங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோருமாறு அறிவுறுத்தியுள்ளார். இந்நிலையில் அரசாணை எண்.**116**, நாள். **24.08.2022** படி, புதியதாக மூன்று ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள அனுமதியளித்து அரசாணை வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில், நகராட்சி நிர்வாக இயக்குர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்றுள்ள Key Performance indicator (KPI) - ல் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கருத்துரு அனுப்பப்பட்டது. கருத்துருவின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குர் சென்னை, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். **33552/2022/EA2 –SWM – 12**, நாள். **10.01.2023** ன்படி, திடக்கழிவுகளை மேலாண்மை பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு **27.03.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு **01.05.2023** முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது, அதுவரை தற்போது பணி மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு செய்து கொடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். **589/2018/எச்1**, நாள். **28.02.2023** ன்படி தூய்மைப் பணியாளர்களுக்கான வெளிக்கொணர்வு ஒரு மாத நீட்டிப்பு காலம் **31.03.2023** உடன் முடிவடைவதாலும், திடக்கழிவு மேலாண்மை பணியினை எவ்வித தொய்வுமின்றி மேற்கொள்ளவும், மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்யவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அதே விலை விகிதத்தில் தற்போது வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களை வழங்கி இப்பணியினை செய்து வரும் திருவாளர். துரை அன்ட் கோ என்ற நிறுவனம், **01.04.2023** முதல் **30.04.2023** வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு தற்காலிக பணி நீட்டிப்பு செய்து தருமாறு வழங்கப்பட்ட இசைவு கடிதத்தின் அடிப்படையிலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒரு மாத காலத்திற்கு தற்காலிக நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.**32.00** இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை வழங்கி வரும் துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு **01.04.2023** முதல் **30.04.2023** முடிய ஒரு மாதத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதற்கும், அதற்காகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.589/2018/எச்1)**

## பொருள் :17

நகராட்சி நிர்வாக இயக்குர் சென்னை, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 33552/2022/EA2 –SWM – 12, நாள். 10.01.2023 ன்படி, திடக்கழிவுகளை மேலாண்மை பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 27.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதியை பூர்த்தி செய்திருந்ததால் 31.03.2023 அன்று விலைப்புள்ளி ( Price Bid) திறக்கப்பட்டது.

இந்நிலையில், பொது சுகாதார அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணியினை 01.05.2023 முதல் புதிய நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஏதுவாக மன்ற ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. ஆனால், நாளது தேதி வரை நகர்மன்றக்கூட்டம் நடைபெறாத காரணத்தினால் 01.05.2023 முதல் திடக்கழிவு மேலாண்மை பணியினை புதிய நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பொது சுகாதாரம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அதே விலை விகிதத்தில் தற்போது வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களை வழங்கி இப்பணியினை செய்து வரும் திருவாளர். துரை அன்ட் கோ என்ற நிறுவனத்தின் இசைவினை ஏற்று 01.05.2023 முதல் 31.05.2023 வரை ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒரு மாத காலத்திற்கு தற்காலிக நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.32.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை வழங்கி வரும் துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.05.2023 முதல் 31.05.2023 முடிய ஒரு மாதத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதற்கும், அதற்காகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.589/2018/எச்1)

## பொருள் :18

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுவினால் பரவும் பிற காய்ச்சல்களை தடுக்கும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1, நாள்.17.09.2018 ன் படி, 300 வீடுகளுக்கு ஒரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர் (Domestic Breed Checker) என்ற விகிதத்தில் இந்நகராட்சியில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை வெளிக்கொணர்வு அடிப்படையில் ஆண்டு முழுவதும் அமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவ்வகையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கடந்த 02.07.2020 முதல் 31.07.2021 வரை திருவாளர்.துரை அன் கோ, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் இப்பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கொரோனா பெருந்தொற்று காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத நிலையில் கொசு ஒழிப்பு மற்றும் கொரோனா தடுப்பு

நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக மன்றத்தின் அனுமதி பெற்று இப்பணியினை செய்து வரும் திருவாளர்.துரை அன்ட் கோ என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.03.2023 முதல் 31.03.2023 வரை ஒரு மாத காலத்திற்கு தற்காலிகமாக கால நீட்டிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி, கால நீட்டிப்பு காலமானது 31.03.2023 உடன் முடிவடையவுள்ள நிலையில், 14.09.2021 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வெவ்வேறு நகராட்சிகளில் வெவ்வேறு விதமான விலைப்புள்ளி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாநிலம் முழுவதும் அனைத்து நகராட்சிகளிலும் ஒரே மாதிரியான விலைப்புள்ளி மற்றும் அந்தந்த நகராட்சியின் மக்கள் தொகை / குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் ஆளிநர்களின் எண்ணிக்கையையும் நிர்ணயம் செய்ய உள்ளதாகவும், அதுவரை வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் கோருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் ஒருங்கிணைந்த விலை விகிதங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோருமாறு அறிவுறுத்தியுள்ளார். மேலும், இதற்கான பணிகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பொருள் தொடர்பாக ஆணை பெறப்பட்டவுடன் புதிய விலை விகிதம்/ஆளிநர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இந்நிலையில், இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 478/2020/எச்1 நாள்.28.02.2023ன் படி கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கான வெளிக்கொணர்வு ஒரு மாத நீட்டிப்பு காலம் 31.03.2023 வரை வழங்கப்பட்டது. மேற்படி கால நீட்டிப்பு முடிவடைவதாலும், புதிய விலை விகிதங்கள் பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரரை நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனாலும், டெங்கு காய்ச்சல் மற்றும் கொசுவினால் பரவக்கூடிய பிற காய்ச்சல்கள் மற்றும் கொரோனா நோய் தடுப்பு பணிகள் போன்றவற்றை திறம்பட எதிர்கொள்ள ஏதுவாக பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அதே விலை விகிதத்தில் தற்போது வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களை வழங்கி இப்பணியினை செய்து வரும் திருவாளர். துரை அன்ட் கோ என்ற நிறுவனம், 01.04.2023 முதல் 30.04.2023 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு தற்காலிக பணி நீட்டிப்பு செய்து தருமாறு வழங்கப்பட்ட இசைவு கடிதத்தின் அடிப்படையிலும், ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் அடிப்படையில் நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒரு மாத காலத்திற்கு தற்காலிக நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.8.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை வழங்கி வரும் துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.04.2023 முதல் 30.04.2023 முடிய ஒரு மாதத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நகரமன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதற்கும், அதற்காகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.478/2020/எச்1)

## பொருள் : 19

பல்லடம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம், 15வது நிதிக் குழு திட்டம், நகர்ப்புற தேசிய சுகாதார இயக்கம் (NUHM), நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம், மூலதன நிதி (CGF) மற்றும் நகராட்சிப் பொது நிதி போன்ற பல்வேறு விதமான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியில் பணி ஆய்வாளர்

பணியிடம் காலியாக உள்ளதால், மேற்கண்ட பணிப் பொறுப்புகளையும், பணி மேற்பார்வையாளரால் மட்டுமே மேற்கொள்ள நேரிடுகிறது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுக்கு அடிக்கடி திட்டப் பிரேரணைகள், மதிப்பீடுகள், பணி முடிவு அறிக்கை மற்றும் பணிகள் தொடர்பான விபரங்களை நேரடியாக சென்று சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளும் போது பணி மேற்பார்வையாளரால் பணிகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதுடன் பணிகளும் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, பல்லடம் நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் உடனடியாக கால தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஒரு தொழில் நுட்ப பணியாளரை 11 மாதத்திற்கு, (தமிழ்நாடு அரசு பொதுபணித்துறை தரப்படுத்தப்பட்ட விலை விகிதப் பட்டியல் படி) தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.65 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 20</u>

பல்லடம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் / நிறுவனம் தேர்வு செய்தல் பணியினை ரூ.390.91 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணிக்கு 23.05.2023ல் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்க்கண்டவாறு :–

1. M/S. Saram Enviro Services Private Limited, சென்னை
2. M/S. S.V.A Man Power Consultancy, சென்னை

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றும்,M/S. S.V.A Man Power Consultancy, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி இல்லாமலும் உள்ளது. எனவே, தொழில்நுட்ப தகுதி உள்ள M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளி (Price bid) விலைப்புள்ளி உறை மட்டும் 27.05.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொள்ள தகுதியான சேவை வழங்குபவர் / முகமை / ஒப்பந்ததாரர் / நிறுவனம் தேர்வு செய்தல் பணி | 390.91 | M/S. Saram Enviro Services Private Limited, சென்னை | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.79% அதிகம் (ரூ.5758/ஒரு டன்னுக்கு) |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களிடம் மதிப்பீடு விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளுமாறு 27.05.2023 ஆம் நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இதில், மேற்படி நிறுவனம் ஒரு டன்னுக்கு ரூ.5650/– என்ற விலைவிகிதத்தில் பணி செய்ய சம்மதம் என தனது 27.05.2023 நாளிட்ட கடிதத்தில் அன்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட பணிக்கு, ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், 0.12% மதிப்பீட்டை விட குறைவாக உள்ளது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இரண்டாம் அழைப்பில் (Second call) வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியாக உள்ளதாலும், திடக்கழிவு மேலாண்மை பணியாக உள்ளதாலும், மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக உள்ளதாலும் பொதுசுகாதார அவசியம் கருதி குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S. Saram Enviro Services Private Limited, சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

## <u>பொருள் :21</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான திருச்சி – கோவை சாலையில் தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலம் விரிவாக்கப் பணி நடைபெற்று வருவதால், திருச்சி–என்.ஜி.ஆர் சாலை சந்திப்பிலுள்ள மினி கோபுர மின்விளக்கை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மினி கோபுர மின்விளக்கிற்கு கான்கிரீட் பில்லர் அமைத்து புதியதாக கேபிள் பதித்து மேற்கண்ட விளக்கை அருகில் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியினை M/s.மார்டன் டெக்னாலஜி, கோவை அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 22</u>

பல்லடம் நகராட்சியில் 06–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. ராயர்பாளையம், கரையாம்புதூர், கிருஷ்ணாநகர், சக்தி நகர், திருப்பூர் ரோடு ஆகிய பகுதிகளில் குடிநீர் பற்றாகுறை உள்ளதால் ராயர்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அருகே தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி அமைத்து தர கோருதல்.
2. கரையாம்புதூர், சக்தி நகர், திருப்பூர் ரோடு ஆகிய பகுதிகளுக்கு புதியதாக 4 இன்ச் பகிர்மான குழாய் அமைத்து தர கோருதல்.

3. ராயர்பாளையம் அறிவத்திருக்கோவில் அருகில் உள்ள நூலகத்தை விரிவாக்கம் மற்றும் கரையாம்புதூரில் அங்கன்வாடி அமைக்க தீர்மானம் நிறைவேற்றி தர கோருதல்.
4. மகாலட்சுமி நகர் முதல் தெருவிலிருந்து மகாலட்சுமி நகர் பாலம் வரை நகராட்சி எல்லைக்குட்பட்ட திருப்பூர் மெயின் ரோட்டில் மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல்

## பொருள் : 23

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையம் கிராமம், க.ச.எண்கள்.1A/2D1B, 1A/2D1C ல் திரு.அருண்பிரதீப் மற்றும் 2 நபர்களுக்கு சொந்தமான 0.1733 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/Tiruppur/LAYOUT No.373/2022 என எண்ணிடப்பட்டு, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.YXSBYBUD/2022/TCP, நாள்.12.12.2022 ல் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.10.2022 ன் படியும் மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொண்டமைக்கும், மனுதாரரின் உத்தேச மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. உத்தேச மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கும், 3 மனைகளுடன் கூடிய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1986/2022/எப்1)

## பொருள் : 24

பல்லடம் நகராட்சியில் 09–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. காமராஜர் சின்ன பள்ளிவாசல் அருகிலுள்ள மழைநீர் வடிகாலை சீரமைத்து தர கோருதல்.
2. ரஹீம் சாகிப் வீதியில் குடிநீர் குறைவாக வருவதால் ரஹீம் சாகிப் வீதிக்கு புதியதாக குழாய் அமைத்து தரக் கோருதல்
3. அருளானந்தா கோவில் வீதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தரக் கோருதல்
4. காமராஜ் நகர் வடக்கு பகுதியில் வடிகால் குழாயை மாற்றி அமைத்து தரக் கோருதல்
5. பட்டேல் வீதி, ரஹீம் சாகிப் வீதி, அருளானந்தா கோவில் வீதியில் சாலை வசதி செய்து தரக் கோருதல்

## பொருள் : 25

பல்லடம் நகராட்சியில் 10–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பாரதிபுரம் ஆரோக்யசாமி ஆசிரியர் வீடு அருகில் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் அவரது வீட்டு சுவற்றில் இறங்கி சுவர் பழுதடைந்துள்ளது. அதன் எதிர்புறம் கான்கிரீட் சாலையில் சென்று சாலை முற்றிலும் சேதமடைந்துள்ளதை சரி செய்து தர கோருதல்.

## பொருள் : 26

பல்லடம் நகராட்சியில் 14–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கொசவம்பாளையம் பொதுக்கழிப்பிடம் அருகே சாலையின் இருபுறமும் கான்கிரீட் தளம் அமைத்துத் தர கோருதல்.
2. சின்னையா கார்டன் வடிவேல் வீடு முதல் பிரதான வடிகால் வரை புதியதாக மழைநீர் வடிகால் அமைத்துத் தரக் கோருதல்
3. இராஜகணபதி நகர் முதல் வீதியில் உள்ள சப்பை தண்ணீர் இரும்பு குழாய் பழுதடைந்துள்ளதால் புதியதாக குழாய் அமைத்து தரக் கோருதல்.

## பொருள் : 27

பல்லடம் நகராட்சியில் 18–வது வார்டுக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி வரப்பெற்ற கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சித்தம்பலம் ரோட்டில் இரண்டு சின்டெக்ஸ் டேங் மற்றும் சின்னையா வீதியில் ஒரு சின்டெக்ஸ் டேங் அமைத்து தர கோருதல்.
2. அபிநயா பேக்கரி முதல் கால்நடை மருத்துவமனை வரை புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் இரண்டாக பிரித்து அமைத்து தர கோருதல்.
3. எஸ்.என்.ஆர் கார்டனில் உள்ள ஆழ்துளை கிணற்றில் மின் மோட்டார் பொருத்தி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கோருதல்.
4. வடுகபாளையம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தர கோருதல்.
5. வடுகபாளையம் ராயல் அவென்யூ பகுதிக்கு புதியதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர கோருதல்.
6. பொள்ளாச்சி ரோடு மயானம் முதல் கதர் கடை வரை உள்ள 2 இன்ச் குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றி புதியதாக 3 இன்ச் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்து தர கோருதல்.

**நகர்மன்றத் தலைவர்**
**பல்லடம் நகராட்சி**